# இயேசுவின் தியாகப் பயணம்

## சிலுவைப் பாதை



திருமதி அருள்சீலி அந்தோணி

www.anbinmadal.org

# தொடக்கச்செபம்

அன்பார்ந்த இறைகுலமே!

சிலுவைப்பாதை பயணம் ஓர் இலட்சியப் பயணம். அன்று நசரேயன் இயேசுவின் தியாகப் பயணம்! வரலாற்று நாயகனின் பாதச் சுவடுகள் காடு மேடு பள்ளங்கள் கரடு முரடான பாதைகளில் தவழ்ந்து தடுமாறிய பயணம். நெறிகெட்டவர்களைத் தட்டிக் கேட்டதினால் பாதை தடுமாறிய தீர்ப்பின் பயணம்.

அன்று யூத வர்க்கத்தின் கொடுங்கோல் ஆட்சியினைத் தட்டிக் கேட்டதினால் தடுமாறிய பயணம்! பாதைகள் பல விதம்! அன்பர் இயேசுவின் பாதையோ நீதி - நேர்மை-அன்பு-பகிர்வு - உண்மை - சமத்துவம், சகோதரத்துவம் என்ற இறையரசின் விழுமியங்களைச் சமுதாயம் கண்டிடப் புறப்பட்ட புரட்சிப் பயணம்.

கருவறையில் தொடங்கி கல்லறை வரை மனித வாழ்வுப் பயணம் தொடர்கின்றது என்ற நிலையை மறந்து மனிதன் சில்லறைப் - பிரச்சனைகளில் சிக்குண்டு சிதறி போகின்ற பயணம்! பொன்னாசை பொருளாசை சேர்ந்து மனிதனைச் சின்னா பின்னமாக்கித் தன் நிஜ வாழ்வைத் தொலைத்துவிடுகின்ற பயணம்! இந்த உலகப் பயணம்! மூச்சு நிற்கும் வரை சிலர் இலட்சியப் பாதை என்னவென்பதை உணர்வதில்லை.

வாழ்க்கை என்றொரு பயணத்திலே சிலர் வருவார் போவார் பூமியிலே! நிலையற்ற உலகில் நிலை என்று ஏன் மதிமயங்கிப் போகின்றான் மனிதன். இந்த மயக்க நிலையை அன்று மாற்றிட மண்ணகம் வந்தவரே இயேசு கிறிஸ்து! அவரது பயணம் 30 ஆண்டுகள் வரை பெற்றோர் - 12 முதல் 30 வரை சமூகப் பகுப்பாய்வு இதன்

உச்சகட்டம். மூன்று ஆண்டுகள் போதனைகள் புதுமைகள், பிணிதீர்த்தல் இவை யாவும் உலகில் பயணமாகும் அனைத்து மாந்தருக்கும் பகிர்ந்தளித்ததின் முத்தான முடிவே சிலுவைப் பாதை, பாடுகள் யாவும் ஒவ்வொரு இதயமதில் பொறிக்கப்பட வேண்டிய உயிரோட்டமான வரிகளேயாகும்.

வருடா வருடம் தவக்காலத்தில் மட்டும் இலட்சியப் பாதையைத் தியானித்து பிறகு சுக போக வாழ்க்கை என்ற நிலைகளை அடியோடு கலைந்துவிட்டு நாளும் என் இலட்சியப் பாதை நீதியின்பால் தொடரும் என்ற வரிகளை முத்தான வாழ்வில் சங்கமிக்க வேண்டுமாய் இன்றைய சிலுவைப் பாதை பயணம் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றது.

மகனே! மகளே!

என் துன்பப் பாதையில் என்னோடு பயணிக்க வருவாயா? ஏழை - எளியோருக்காய் சுமக்கின்ற சிலுவையை நீ நாளும் சந்திக்கும் வறியோர்களின் முகத்தில் என்னைக் காண்பாயா? என்னைப் பின் தொடர்ந்து என் பாடுகளைச் சற்றுத் தியானிக்க வருவாயா?

# முதல் நிலை

## தீர்ப்பு

## செய்தி

மகனே! மகளே!தீர்ப்பு என்ற நாலு எழுத்துகள் என்னுள் புகுந்து தீராத வேதனையை அடைந்தேன். ஏன் நான் என்ன தவறு செய்தேன்? அநீதியைத் தட்டிக் கேட்டதாலா? ஊனமுற்றோர் நலமடைந்ததா? தொழுநோயாளர் குணமானதா ஏன் எனக்கு இந்தத் தீர்ப்பு.

தவறு செய்தவன் - கொள்ளையடித்தவன் கொள்ளைக்காரன் - கொலைக்காரனுக்கு அன்று சிலுவை தண்டனை! நான் என்ன தவறு செய்தேன் நண்பா இந்தத் தீராத தீர்ப்பு என்னை நொறுங்க வைத்துவிட்டதே!

## சிந்தனை

நண்பா! இன்று உன்னைப் போன்று அநேகர் உன் அருகில் பல தொல்லைகளில் சிக்கியிருப்பார்கள். உண்மை என்னவென்று அறிந்து தெளிந்து தீர்ப்பு வழங்கு. அநியாயத் தீர்ப்பு வழங்காதே!

## செபம்

அன்புத் தந்தையே, அநீதியான தீர்ப்புகள் வழங்கப்படாமல் நீதியை நிலைநாட்டி அடுத்தவரின் நலனுக்காய் நான் பாடுபடும் வரம் தாரும் ஆமென்.

# இரண்டாம் நிலை

## என் தோளில் கரடுமுரடான சிலுவை சுமத்துகிறார்கள்

## செய்தி

மகனே! மகளே!

கழுமரத்தாலான சிலுவையை என் தோளில் சுமத்தினார்கள். ஏற்கனவே நான் நொறுங்கிப் போயிருந்ததால் எனக்கு உடம்பு எல்லாம் பச்சை புண்ணு எங்குமே என் உடலில் அடியில்லாத இடமே இல்லை! என்ன செய்வது? உன்னுதவி வேண்டுமய்யா! என்று ஏங்குகின்றேன், உன்னைப் பார்த்து! தோழியே!

தோளின் சுமை அழுத்த தடுமாறுகிறேன் உன்னை நோக்கி. என் போன்று வாழ்வில் வேதனையால் துடிக்கும் நபர்களுக்கு உதவி செய்வாயா?

## சிந்தனை

நண்பா! வேதனை என்றால் என்னவென்பது என் போன்ற வறியோரின் உள்ளங்களில் தான் தெரியும் அப்போது நண்பனை நாடிச் சென்று தோள் கொடுத்து உதவுவாயா! இதுவே என் ஆவல்,

**செபம்:** அன்பு இறைவா இந்த உலகில் பல்வேறு சுமைகளினால் துவண்டு போயிருக்கும் கனத்த உள்ளத்திற்கு ஆறுதலான வார்த்தை பேசி அவன் சுமையை நான் இறக்கும் வரம் தாரும். ஆமென்.

# மூன்றாம் நிலை

## நான் தடுமாறி முதல் முறையாக விழுகின்றேன்

## செய்தி

மகனே! மகளே!

என் தோளில் சிலுவை என்னை அழுத்த, உடலின் வேதனை, பாதையோ கரடுமுரடான குண்டும் குழியுமான பாதை, கால் இடற தட்டித் தடுமாறி விழுந்து கிடக்கின்றேன். வருவாயா என்னைக் கரம்பிடித்துத் தூக்கிவிடுவாயா? என் கண்கள் தேடுகின்றன. என் போதனைகளைக் கேட்டவர்கள் திருமுழுக்கினால் என் உடலோடு இணைந்தவர்களின் இரத்த நாளங்களில் என் வேதனைக் குரல் ஒலிக்கின்றதா நண்பா! வருவாயா எனக்குத் தோள் கொடுப்பாயா?

வீழ்ச்சி எழத்தானே! என்ற வரிகள் உன் வாழ்வாகட்டும் தோழா.

## சிந்தனை

தோழா உன் கண்முன் எத்தனையோ சோக நிகழ்வுகள் நாளும் அரங்கேறுகின்றன. அவர்களின் தடுமாற்றங்கள் எண்ணிலடங்கா! இப்படித் தடுமாறிய ஒருவருக்கு நீ செய்த போதெல்லாம் எனக்கே செய்தாய்!

**செபம்:** அன்பு இறைவா, உன் பிள்ளைகள் அன்றாடம் அரங்கேறும் துன்ப துயரங்களில் துவண்டுபோகும் மக்களை எழுப்பிட வரம் தாரும். ஆமென்

# நான்காம் நிலை

**தாய் சேய் சங்கமம்**

## செய்தி

மகனே! மகளே!

பத்து மாதம் சுமந்து பெற்ற என் தாய்மை பார்வை சேயின் பார்வை சங்கமிக்க மனது விம்மிப் புடைக்க கண்களில் கண்ணீர் கரைபுரண்டோட என் விழியும் என் தாயின் விழியும் சங்கமம். இங்கே விண்ணும் - மண்ணும் சங்கமம், மரியாள் எனும் தாய்மை மௌனமாய் எனைக் காணும் வேளை, வையகம் அவளில் அடைக்கலம் ஆனதை உணர்கின்றேன்! இரு உள்ளங்களும் உறவை ஊன்றிய உன்னதமான சந்திப்பு என் வேதனை என் தாய்மையை

நிலைகுலையச் செய்த சந்திப்பு! மௌனம் இங்கே பல கருத்துக்களை முன் வைக்கின்றது.

## சிந்தனை

நண்பா! நீயும் உன் தாயை ஒருகணம் நினை! காரணம் உன்னைப் பாலூட்டி சீராட்டி வளர்த்தவள்! அம்மா என்ற வரிகளோடு அமுதினை ஊட்டியவள்! உலகில் நீ வளர்ந்து அனைத்தையும் (பட்டங்கள்) பெற்றுத் - தலைசிறந்து விளங்குவாய் என மனக்கோட்டைகள் கட்டியவள். அவளை நிர்கதியாய் விடாதே! முதுமை - இளமையை அணைக்கத் தூண்டும் என்பதை மறவாதே!

**செபம்:** என் அன்புத் தந்தையே! இந்த உலகில் மானிடர் வடிவெடுக்க தாய்மை வழங்கிய தந்தையே மனிதகுலம் தான் பெற்ற மைந்தர்களிடம் நிறைவு காண வரம் தாரும். ஆமென்

## ஐந்தாம் நிலை

### சிரேனே ஊர் சீமோனின் உதவியை நாடுகின்றேன்

## செய்தி

மகனே! மகளே!

என் உடல் புண்ணாகி குருதி சொட்ட நான் மூச்சு விட்டுவிடுவேனோ என்ற பயம் அந்தக் கயவர்களின் மனதைத் தொட அந்த நயவஞ்சகர்கள், ’டேய்! இவன் இங்கேயே மண்டையைப் போட்டுட போறாண்டா! யாராவது கொஞ்சம் சுமக்கிறாங்களா’ என்று தேடும் போது சீரேனே - ஊராகிய சீமோன் என் சிலுவையைச் சுமக்க முன்

வருகின்றார்! அப்பாடா கொஞ்சம் பாரச் சிலுவை இறங்கியதும் அந்தக் கழுமரத்தின் அழுத்தம் சுமை இறங்கியது. இருப்பினும் என் உடலின் காயங்கள் குருதி சொட்டி ஒட்டிக்கொண்ட ஆடையின் உரசல் வேதனை ஒருபுறம். நடக்கின்றேன் மேடு பள்ளங்களைக் கடந்து என்னோடு பயணிப்பாயா!

## சிந்தனை

நண்பா! சீமோனைப் போல நீயும் அடுத்தவர் வேதனையில் உதவிடு. என் சுமை எளிது அழுந்தாது என்ற வரிகள் உன் குருதியில் நங்கூரமாகட்டும்! எத்தனை பேர் இந்த உலகில் என்னைப் போன்று துன்ப துயரங்களில் துவண்டு கொண்டிருக்கின்றனர். அவர்கள் வேதனையில் நீயும் பங்குகொண்டு நல்ல சீமோனாக மாறுவாயா!

**செபம்:** என் அன்புத் தந்தையே இறைவா! உம் மாந்தர் அடுத்தவரின் துன்ப துயரங்களில் பங்கு கொண்டு உதவிடும் மனதைத் தந்திடும் வரம் தாரும். ஆமென்

# ஆறாம் நிலை

## வெரோணிக்காவின் வீரச் செயல்

## செய்தி

மகனே! மகளே!

எனது ஆறாவது தடத்தைச் சற்று உற்றுக் கவனியும். அன்று யூதவர்க்கம் பெண்களை அடிமைப்படுத்திய சூழல். என் கண்ணீரையும் வேதனையையும் கண்ட புரட்சிப் பெண் வெரோணிக்கா. என் முகம்

இரத்தமும் கண்ணீரும் கலந்து முகம் மூடிக்கொண்டது. பாதை தெரியவில்லை. நடக்க முன்னேறுகின்றேன்; தடுமாற்றம். என் நிலையை உணர்ந்தாள் தன் கைத் துண்டைக் கொண்டு என் முகத்தைத் துடைக்கும் போது இருண்ட இந்த உலகம் பார்வை பெற்றது போல் என் கண்களின் குருதி, என் முகச் சாயலைப் பதித்துவிட்டேன். ஏனென்றால் இயேசுவின் முகம் முக்காலமும் உம் போன்றவர்கள் அறிந்துகொள்ளத்தான். அன்று வெரோணிக்கா புரிந்த நிந்தை என்பதை மறவாதே.

## சிந்தனை

வா நண்பா! என் போன்று அநேகர் இந்த உலகில் செய்யாத தவறுக்காக நரக வேதனை அனுபவிக்கின்றார்கள். எல்லாரும் ஒரு தாயின் பிள்ளைகள்தான் என்ற என் வரிகளை உனது உள்ளத்தில் பதிவு செய்து உதவிடுவாய் தோழா, இந்த நிலையற்ற வாழ்வு நிலையென நம்பி வாழ்வோர் நடுவில் உன் நிறை வாழ்வை நிலைநாட்டு தோழா!

**செபம்:** என் அன்புத் தந்தையே இறைவா! அடுத்தவர் துன்பத்தில் நான் கடந்து சென்று உதவிட எனக்கு மனம் தாரும். ஆமென்

## ஏழாம் நிலை

**நான் இரண்டாம் முறையாக நிலை தடுமாறி விழுகின்றேன்**

## செய்தி

மகனே! மகளே! !

கடந்து வந்த பாதை கரடுமுரடாக இருந்தாலும் பாரச் சிலுவையின் அழுத்தம் தாங்க முடியாத நிலையில் கால் இடறி விழுந்தேன் இரண்டாம் முறை! மகனே! என்னை யாராவது தூக்குவார்களா என்று ஏங்கின்றேன். ஒருவரும் முன் வரவில்லை . நானே தட்டுத் தடுமாறி தலைநிமிர்ந்து கோர வேதனையைத் தாங்கிக் கொண்டேன்! என் வேதனையில் பங்கேற்க வருவாயா மகனே! மகளே!

## சிந்தனை

நண்பா! உன் அன்றாட அலுவல்களிலோ பணிபுரியும் இடங்களிலோ எத்தனையோ வறியோர்கள் தினம் தினம் தடுமாறுகின்றனர் ! இடறி வாழ்விலும், வாழ்வாதாரத்திலும் தடம்புரண்டு போகின்றனர். அவர்களை இனம் கண்டு அவர்களைக் கரம்பிடித்துச் சேர்ப்பாயா தோழா! உலகில் எங்கு பார்த்தாலும் சுயநலபோக்கே தாண்டவமாடுகின்றது. நீயாவது பொதுநலம் காண்பாயா!

**செபம்:** என் அன்புத் தந்தையே இறைவா! தினம் தினம் உம் மக்கள் பாசச்சூழலிலும், மனச்சோர்விலும் அகப்பட்டுக் கரைசேர முடியாமல் தவிக்கும் உம் மானிடரைக் கரைசேர்க்கும் வரம் தாரும். ஆமென்

# எட்டாம் நிலை

## எருசலேம் நகர் மகளிர் கண்ணீரைக் காண்கின்றேன்

## செய்தி

மகனே! மகளே!

எருசலேம் நகர் பெண்கள் என் துன்ப வேதனையைக் கண்டு கண்ணீர் விடுகின்றார்கள் ! என் வேதனை அவர்களைக் களங்க வைத்துவிட்டது! மகளிரே எனக்காக அழாதீர்கள். உம் பிள்ளைகளுக்காய் அழுங்கள் என்கின்றேன். செய்த குற்றத்தைத் தட்டிக் கேட்டதினாலேதானே நான் இந்த வேதனைப் படுகின்றேன். உமது ஆறுதலான கண்ணீர் என்றென்றும் உலகத்தின் வரலாற்றில் பதிக்கப்பட வேண்டியவை.

## சிந்தனை

நண்பா! அன்று எருசலேம் மகளிர் கண்ணீரைக் கண்டேன். இன்று எத்தனையோ பெண்கள் கணவன் உறவிலும் தாய்மார்கள் பிள்ளைகள் உறவு கிடைக்குமா என்றும் அநேக பெண் சிசுக்கள் கருவறையிலேயே காணாமல் போகின்றனர். அனுதினம் சிதறடிக்கும் மகளிரை இனம் கண்டு ஆறுதல் தருவாயா தோழா! பணிகளின் கட்டாயத்தினால் நயவஞ்சகர்களின் வலையில் சிக்கித் தவிக்கும் பெண்களைக் கரை சேர்த்திடுவாயா தோழா!

## செபம்

அன்புத் தந்தையே இறைவா! உலகில் துன்புறும் மகளிர் துயர் துடைக்க நல் உள்ளங்களை எமக்குக் காட்டியருளும் வரம் தாரும். ஆமென்

# ஒன்பதாம் நிலை

## சிலுவை பாரம் தாங்காது மூன்றாம் முறை நிலைதடுமாறி விழுகின்றேன்

# செய்தி

மகனே! மகளே!

மூன்றாம் முறையும் என் கால்கள் தடுமாறுகின்றன. என்ன செய்வது? யாராவது வருவார்களா என்று சுற்றும் முற்றும் நோக்குகின்றேன். ஒருவரும் முன்வரவில்லை! வீழ்ச்சி மீண்டும் எழத்தானே என்று தானே தலைநிமிர்ந்து ஒரு கையால் பாரச் சிலுவையைத் தாங்கிக் கொண்டும் மறு கையால் பூமியைத் தாங்கிக் கொண்டும் எழுந்து நிற்கின்றேன்! என் வேதனை எனக்குத்தான் உணர முடிகின்றது! உன் மனம் என் வேதனையை உணர முடிகின்றதா!

# சிந்தனை

நண்பா! நீ எத்தனை முறை விழுந்தாலும், தவறினாலும் உனக்கும் பரிகாரம் உண்டு என்று இங்கு நல் ஆசானாய் அறிவுறுத்துகின்றார். செய்த தவறை உணர்ந்து மனம் வருந்து போதும் என்று உனக்கு நல் பாடம் புகட்டுகின்றார். எனவே உன் குற்றத்தைப் பிறர் மன்னிப்பது போல் பிறர் குற்றத்தை உனக்கு அடுத்தவர் குற்றத்தை நீ மன்னிக்கும் மனம் கொள்வாய் தோழா!

**செபம்:** அன்புத் தந்தையே இறைவா! எம் குற்றத்தை உணர்ந்து மனம் வருந்தி மன்னிப்புப் பெறவும் அடுத்தவர் குற்றத்தை மன்னிக்கும் நல் மனதினை வழங்கிடும் வரம் தாரும். ஆமென்

# பத்தாம் நிலை

## என் ஆடைகளை களைகின்றார்கள்

## செய்தி

மகனே! மகளே!

பல்லாயிரம் மக்கள் வாழ்ந்திட மண்ணகம் இறங்கிய நான் என் கண்ணீரைத் துடைக்கக்கூட ஒரு சாண் துணி என் உடலில் இல்லாதவாறு களைகின்றார்கள். காய்ந்து தோய்ந்து போன துணியுடன் என் உடல் தசைகளும் பிய்த்துக்கொண்டு வருகின்றதே! என்ன செய்வேன். வேதனை ஒருபுறம், நிர்வாணமாய் நிற்கின்றேன்! என் வேதனை உனக்குப்புரிகின்றதா தோழா! என் நிர்வாணம் உனக்கு உணர்த்தும் செய்தி யாது?

## சிந்தனை

நண்பா! எத்தனையோ செல்வந்தர்கள் உல்லாச வாழ்வு வாழ பெண்களை நிர்வாணமாக்கிப் படம் எடுத்துப் பணம் சேர்க்கும் நிலை உண்டு என்பதை நினைவுகூர்வாய்! அநேகர் வீதியில் தன்னிலையை மறந்து உடுக்கத் துணி இல்லாமல் சுற்றும் நிலையைச் சற்றுகூர்ந்திடுவாய்! தோழா! ஆடை அணிவித்து அணி செய்வாய் தோழா! நிர்வாணம் படைப்பில் இருந்தது! ஆனால் ஆதாம்-ஏவாள் கட்டளையை மீறியதால் சூடிக்கொண்டதே ஆடை அலங்காரம் என்பதை மறவாதே!

## செபம்

அன்புத் தந்தையே இறைவா! என் அருகிலிருக்கும் ஏழை எளியோருக்கு ஆடை ஆபரணங்கள் வழங்கி நல் உறவை வளர்த்திடும் வரம் தாரும். ஆமென்

# பதினோராம் நிலை

## செய்தி

மகனே! மகளே!

'உன்னதரின் மகன்' எனப்பட்ட என் கைகளில் 12 அங்குலம் ஆணி என் உள்ளங்கைகளிலும் கழுமரத்தில் என் கைகளை விரித்து ஓங்கி அறைகிறார்கள். என் உடலில் இருந்த இறுதிச் சொட்டு இரத்தமும் வலியும் வெளியேறுகிறது, வலி தாங்க முடியவில்லை! வளர்ந்த என் கால்களை ஒன்றாகப் பிணைத்து 12 அங்குல ஆணி என் கால்களை துளைக்கின்றது. என் முட்டியிலும் அடி! தலையில் முட்கிரீடம் வேறு தரையில் மல்லார்ந்து கிடக்கின்றேன். என்னைத் தேடுவார் ஒருவரும் இல்லை மகளே!

## சிந்தனை

நண்பா! உன் அருகிலோ அல்லது சிறைச்சாலையிலோ எத்தனையோ நல்லவர்கள் அநியாயப் பழிக்கு ஆளாகி படும் துன்பத்தைக் கண்டு அவர்களுக்கு உம்மாலான உதவியைச் செய்வாயா தோழா! உன் அயலானை அன்பு செய் என்ற வரிகள் உன் மார்பில் உறங்கட்டும் தோழா!

## செபம்

என் அன்புத் தந்தையே இறைவா! வீண்பழிகளுக்கு உள்ளாகித் துன்புறும் மக்களை இனம் கண்டு உதவி செய்திடும் மனதைத் தாரும் - ஆமென்

# பன்னிரண்டாம்

# நான் சிலுவையில் என் உயிரை விடுகின்றேன்

## செய்தி

மகனே! மகளே!

விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே அந்தரத்தில் தொங்குகின்றேன் பார் மகனே! என் உடலைத் தாங்கும் சிலுவைக்கும் என் உடலுக்கும் இடையே மூன்று ஆணிகள் மட்டும்தான். நான் பிய்த்துக்கொண்டு மரண வேதனையுடன் விழுவேனோ என்று காவலர் கூட்டம் என்னைக் கவனிக்கின்றார்கள். என் கண்கள் பஞ்சடைந்து முட்கிரீடம் கண் வழியாகத் தெரிய, கால்கள் கீழ்நோக்கி குருதி சொட்ட இந்த வேளையில் என் கடைசி வரிகள் உன் வாழ்வில் வளம் சேர்க்க ' முத்தான ஏழு வாக்கியங்களை கேளாய் மகனே! மகளே!

## சிந்தனை

1. பிதாவே இவர்கள் இன்னதென்று அறியாமல் செய்கின்றார்கள். இவர்களை மன்னியும்!

2. கள்வனுக்கு வான் வீட்டில் இடமளிக்கின்றேன்.

3. அம்மா இவரே உம் தாய், இவரே உம் மகன்.

4. ஏலி ஏலி லெமா சபக்தானி! அதாவது என் இறைவா, என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்,

5. தாகமாய் இருக்கின்றேன்

6. எல்லாம் நிறைவேறியது

7. இறுதியாக தந்தையே, உமது கரங்களில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்.

இயேசுவின் இறுதி வார்த்தைகள் உலகம் முடியும் மட்டும் எதிரொலிக்கும் 'உயிரலைகள்' என்பதை நினைவில் கொள் தோழா!

## செபம்

என் அன்பு இறைவா! உன் மகனின் இறுதி வார்த்தைகள் என் வாழ்வின் 'மைல் கல்' ஆக ஒலிக்கும் வரம் தாரும். ஆமென்

# பதிமூன்றாம் நிலை

## என் உடல் என் தாயின் மடியில்

## செய்தி

மகனே! மகளே!

என் உயிர் பிரிந்ததும் என் விலாவில் ஈட்டியால் குத்தி என் உயிர் மூச்சை சோதனை செய்கின்றார்கள். என்ன செய்வது என் குருதியும் நீரும் கலந்து இறைமகன் என்பதை உறுதியூட்டுகின்றதே! என் தாய்மடி எனது மலர் மஞ்சம்! ஆனால் என் தாயின் கதறல் தாகம், குமுறல்,

சிமியோனின் வார்த்தைகள் ’உன் விலாவை ஓர் வாள் ஊடுருவும்’ வாளாகி கிடக்கின்றேன் அம்மாவின் மடியில்! மகனே! உன்னை இப்படிக் காணவா இறைவன் தாயாகத் தேர்ந்துகொண்டார். கபிரியேலின் வார்த்தைகள் எலிசபத்தின் வாழ்த்துகள் எத்தகையதோ! சிமியோனின் வார்த்தைகள். 12 வயதில் எருசலேம் தேவாலயத்தில் நீ உரைத்தவை. சிலுவையைச் சுமந்து போகையில் உன் பார்வை சந்திப்பு. சிலுவையடியில் யோவானை எனது மகனாக அறிவித்தது இவைகள் அனைத்தும் தந்தையே உம் மீட்புத் திட்டத்தின் கருவியானேன் என்று நினைத்து கலங்குகின்றேன்! இறைவா, இனி உம் திட்டத்தை என் மகன் விட்டுச் சென்ற பணிகளைத் தொடருவேன் என்று தனது அருமை மகனை மடியில் தாங்கிய என் அன்னையின் கதறலைக் கேளாய் மகனே! மகளே!

## சிந்தனை

நண்பா! என் போன்ற அநேகர் படும் துன்ப துயரத்தில் நல்லவர்கள் கெட்டவர்கள் யாராகினும் சகிப்புத் தன்மை கொண்டு அனைவரையும் என்ன துன்பம் நேர்ந்தாலும் உதவிடும் நல் மனிதனாய் வாழ்ந்திட அழைப்புப் பெற்றிடுவாய்! இந்த உலகம் உள்ளவரை உன்னையே அடுத்தவருக்காய் அளித்திடு! அதற்கு முன்வருவாயா தோழா!

## செபம்

அன்புத் தந்தையே! நின் மகனைப் போன்று உயிரைக் கொடுத்தாவது அடுத்தவர் நலனைக் காத்திடும் வரம் தாரும். ஆமென்

# பதினான்காம் நிலை

## என்னை கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்

## செய்தி

மகனே! மகளே! -

நரிகளுக்கு வலைகள் உண்டு. பறவைகளுக்குக் சடு உண்டு! ஆனால் எனக்கு என் சடலத்தைப் புதைக்கக்கூட இடமில்லை! இதுதான் உலகம். கல்லறையும் அயலானின் கல்லறை எனக்கு உரிடையாகின்றது. அதி நவீன வாசனைத் திரவியங்களுடன் வெள்ளை போளம் இதை நான் பிறந்த போதே எனக்குக் காணிக்கையாக மூன்று ஞானிகள் தந்து சென்றார்கள். இதைக் கொண்டு என்னை அடக்கம் செய்துவிட்டார்கள். உலகம் காரிருள் சூழ்ந்தது. இறைமகன் பாதாளத்திற்குள் சென்றுவிட்டேன். இங்கு மரித்தவர்களையும் என்னுடன் கொண்டுவருவேன் மகனே! மகளே!

## சிந்தனை

நண்பா! நிலையற்ற உலகம் நிலை என நினைத்து நிம்மதியோடு வாழ்பவர்கள் சற்று இயேசுவின் வருகை போதனைகள், பாடுகள், இறப்பு தரும் செய்தி நம் போன்ற அனைத்து மானிடருக்கும் விடுக்கும் செய்தி! வாழும் வரை நல்லதைச் செய்து வாழ், எதை விதைக்கின்றாயோ அதையே அறுவடை செய்வாய் தோழா! என்பதை மனதில் பதிவு செய்!

## செபம்

அன்புத் தந்தையே இறைவா! நான் இறந்தும் வாழும் பேற்றைப் பெற்று வாழ வரம் தாரும். ஆமென்.

---

# இறுதி செபம்

என் இதயத்தைக் கிழித்த உமது பாடுகளின் வேதனைகள் நான் மனம் மாறிட நீர் அளித்த இந்த முத்தான சிலுவைப் பாதை பயணம் என் வாழ்நாள் முழுவதும் எனது வாழ்வில் ஒலித்துக்கொண்டிருக்கும் ரீங்கார ஒலி என்பதை என் மனதில் ஆழத்தில் பதிந்துகொள்கின்றேன். இயேசுவே! எனக்காக மீண்டும் ஒவ்வொரு இதயங்களிலும் பிறப்பீர் என்ற உம் வரலாற்றுச் சுவடுகளை நாளும் என் இதயமதில் ஏந்தி உலகின் கடை எல்லை வரை இறைமகன் இயேசுவின் பாடுகள் ஒலித்திடவும் மாந்தர் அனைவரும் மீட்புப் பெறவும் இந்தச் சிலுவை பாதை வாழ்வில் வசந்தத்தைத் தரும் அருமருந்தாகிட வரம் வேண்டி என் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்திட விழைகின்றேன்! இல்லம் நோக்கி, என்னை நாளும் வழிநடத்திடுவாய் அன்பு இயேசுவே ஆமென்.

